**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

# DEPOSITION OF WITNESS

**Calendar Case No.32/2024**
**Prosecution Witness**:PW1

| | | | |
|---|---|---|---|
| Name | பாலவடிவேல் (PW1) | Caste | |
| Father's Name | ராமசாமி | Calling | |
| Village | அவிநாசி | Religion | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் மாவட்டம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of March 2026** by K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present),*

**முதல் விசாரணை(அரசு தரப்பு):–**

கடந்த 13.03.2023 ம் தேதி என் அக்கா சிவகாமி போன் செய்து என் அண்ணனுக்கு விபத்து ஏற்பட்டு விட்டதாகவும் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அனுப்பி வைத்திருப்பதாகவும் தகவல் சொன்னார்.நான் அவிநாசி அரசு மருத்துவமனைக்கு சென்று என் அண்ணனை பார்த்துவிட்டு சம்பவம் குறித்து விசாரணை செய்தபோது என் அண்ணன் சைக்கிளில் சென்ற போது மாருதி ஸ்விப்ட் கார் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டதாக சொன்னார்கள். அந்த காரினை ஓட்டிய நபர் சந்திரகுமார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேன். அதன்பின்பு எண் என் அண்ணனை நான் அவிநாசி அரசு மருத்துவமனையில் இருந்து ரேவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அடுத்த நாள் நான் சேவூர் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அண்ணனை ரேவதி மருத்துவமனையில் இருந்து கோவை அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். என் அண்ணன் அங்கு நான்கு நாட்கள் சிகிச்சையில் இருந்து சிகிச்சை பலனின்றி 18.03.2023 ம் தேதி அன்று கோவை அரசு மருத்துவமனையில் வைத்து காலமாகிவிட்டார். பின்பு போலீசார் பிரேத விசாரணை செய்தபோது நான் உடனிருந்து பிரேதத்தை அடையாளம் காண்பித்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் 12 ஆம் வகுப்பு படித்துள்ளேன்.எனக்கு விபத்தை பற்றி நேரடியாக எதுவும் தெரியாது. விபத்து பற்றிய புகாரை நான் விபத்து நடந்து மறுநாள் காலை காவல் நிலையத்தில் கொடுத்தேன். அந்தப் புகாரை நான் தான் எழுதினேன். புகாரில் உள்ள சங்கதிகளையும் நான்தான் எழுதினேன்.புகாரில் நான் எழுதிய விபரங்களை எனக்கு யார் சொன்னார்கள் என்றால் காவல்துறையினர் சொன்னார்கள்.காவல்துறையினர் சொன்ன விபரங்களின் அடிப்படையில் நான் புகார் கொடுத்தேன். விபத்து நடந்து எத்தனை நாட்கள் கழித்து என்னை போலீசார் விசாரித்தனர் என்றால் மருத்துவம்மனையில் இருந்தபோது விசாரித்தனர் மறுநாள் இறந்த பின்பு விசாரித்தனர் அதற்கு பின்னிட்டு என்னை விசாரிக்கவில்லை. ரேவதி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற பின்பு விசாரித்தனர். என்னை விசாரித்த போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் என் மனைவி மற்றும் என் சகோதரி இருந்தார்கள். இரண்டாவது முறை போலீசார் என்னை விசாரிக்கும் போதும் என் மனைவி என் சகோதரி மற்றும் என் மகன் உடன் இருந்தார்கள். மேற்படி நபர்களை தவிர வேறு யாரையும் போலீசார் விசாரிக்கவில்லை.எனக்கு இந்த சம்பவம் பற்றி எதுவும் தெரியாது என்னும் போலீசார் கேட்டுக் கொண்டதற்கு என்னங்க நான் புகார் கொடுத்து உள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |